**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 25. ஸ்ரீகணேசநாதர்**

---

***அன்பர்கள் எக்குலத்திலும் எவ்வூரிலும் அச்சாதியிலும் எம்மதத்திலும் தோன்றி சமூஹத்தின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டுத் தங்களுக்கு உரிய வீடு பேற்றினைத் தேடுவர். நாம சங்கீர்த்தனம் மிக மிக வலிமை மிக்கது.மனிதன் அனாவிசயமாகத் தன் புலன்கள் தேடும் சுகங்களுக்குத் தன் சக்தியைச் செலவிடக் கூடாது.இதனால் அவனது ஜீவ சக்தி குறையும், ஆன்மீகப் பயணம் தடைப்படும்.***

உஜ்ஜயினி மாநகரில் வாழ்ந்தவர் ஸ்ரீகணேச நாத்.அப்போது மஹாராஷ்ட்ராவை சிவாஜி ஆள்கிறார்.
பூர்வ ஜென்ம புண்ணியத்தால் பண்டரீ ஈசனுடைய பக்தியில் திளைக்கும் பேற்றினைப் பெற்றதால், ஒரு காலத்தில் தன் தாய்தந்தையின் முடிவுக்குப் பின் தன் சொத்துக்கள் அனைத்தையும் ஊர் ஏழைகளுக்கு தானம் செய்து விட்டு, பண்டரிபுரம் சேர்ந்து வாழத் தொடங்கித் தன் ஆன்மீக சாதனைகளை வெகு ஸ்ரத்தையுடன் முடுக்கிவிடுகிறார்.

புலன் இச்சைகளால் ஏற்படும் சுகங்கள் தவறல்ல.ஆனால் அவை மனிதனின் sal energyயைக் குறைத்துவிடும் என்று இவர் மிகவும் தீவிர ப்ரச்சாரம் செய்வார்.பல நாம சங்கீர்த்தனம் மூலம் மனதைப் புலன் இச்சைகளில் இருந்து திசைத் திருப்ப முடியும் என்றும் உறுதியாய் வாழ்கிறார்.இவரது தூய உண்மையான வாழ்க்கையை மக்கள் மதித்தனர்.பாண்டுரங்கனை தரிசிக்க வரும் மக்கள் இவரது ஆசீர்வாதத்தையும் மந்த்ரோபதேசத்தையும் பெறுவதும் வழக்கம் ஆயிற்று.

**வீரசிவாஜி மதித்த குரு**

இவரைப் பற்றி வீர சிவாஜியும் அறிகிறார்.குறிப்பாக அவரது சத்குரு ஸ்ரீசமர்த்த ராமதாஸர் இவரைப் பற்றி எடுத்துக் கூறி அவரை அண்டி ஆன்மீக நெறிகளைப் பெற்றுக் கொள்ளும்படி சிவாஜிக்கு அறிவுறுத்தினார்.

**மக்களை மாற்றிய sal energy concept**

முறைப்படி கணேசரைத் தன் அரண்மனைக்கு வரவழைத்து மரியாதை செய்து, தன் குருநாதர் தனக்குக் கூறிய செய்தியைக் கூறக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார் கணேசர்.அரண்மனைக்குள் அன்று முதல் பொதுமக்கள் வருவதும், ஆன்மீக உரைகள் கேட்பதும், நாம சங்கீர்த்தனம் புரிவதும் வழக்கம் ஆயிற்று.குறிப்பாக sal energy பற்றிய கணேசரது கருத்துக்கள் மக்களை சிந்திக்க வைத்தது.பலர் மிகவும்

எளிய வாழ்க்கையை எதிர்கொள்ள ஆரம்பித்தனர்.

**சந்தனக் கட்டில் தந்த ஞானம்**

அன்று ஒரு மாலைப் பொழுது.சிவாஜி மிகவும் பவ்யமாக ஒரு அழகிய சந்தன மரக்கட்டிலை கணேசர் முன் வைத்து, ”மஹராஜ்! தாங்கள் இளைப்பார இக்கட்டிலைச் சமர்ப்பிக்கிறேன்!” என்று கூற, கணேசர், ”மஹராஜ்! சில செங்கற்களைக் கொண்டு வருக!” என்றார்.

அதன் காரணத்தை மன்னர் வினவ, ”***சிவாஜி ராஜ்! சந்தன மரம் தன்னைக் கரைத்துக் கொண்டு முற்றிலும் அழிந்து தன் வாசனைக் கழித்துக் கொள்கிறது.அதைப் போல் தான் மனிதனும் இருக்க வேண்டும்.அதற்காகவே இறைப்பணிகளில் தூய கந்தம் மிகு சந்தனம் பயன்படுத்துகிறோம்.அப்படி இருக்க, புலன் இச்சையைத் தூண்டும் இக்கட்டில் மேலும் அடியேனுக்கு வேண்டாத வாசனைகளைத் தூண்டும்! அதைத் தடுக்கவே பாண்டுப்ரபு நிற்கும் செங்கற்கள் தேவை!”*** என்றார்.

இதன் உள்ளார்ந்த தத்துவத்தை உணர்ந்த வீர சிவாஜி அமைதியானார்.காலம் கழிகிறது.கணேசரது ஆன்மீக வழிகாட்டலில் பலர் மிகவும் எளிமையான வாழ்க்கையை வாழ ஆரம்பித்தனர்.இதனால் ஆடம்பர வாழ்க்கைக்கு உதவும் வியாபாரம், தொழில்கள் முடங்கின.இதனால் கோபம் கொண்ட பலர், ”நீர் என்ன அவதார புருஷரோ? மக்களை வீணாக சந்யாசிக் கூட்டம் ஆகிவருகிறீர், மன்னருக்கும் அறிவே இல்லை! உன்னை வைத்துக் கொண்டாடுகிறார்! எங்கே உன் அறிவுரையை இதோ இந்த பட்டுப்போன மரத்துக்கு உபதேசம் செய் பார்க்கலாம்!” என்று கத்த,

**பட்ட மரம் உண்ட ப்ரசாதம்**

”***பாண்டுரங்கன் அவதாரம் செய்து கீதை மூலம் உணர்த்தியதை அடியேன் கடைப்பிடித்து, மக்களுக்கும் மன்னருக்கும் சொல்வது உண்மையாயின் ப்ரசாதத்தை உண்க மர தேவதையே!”*** என்று கூறி ஒரு கை அன்னத்தை மரத்தின் முன்வைக்க, மரம் சற்று பிளந்து ப்ரசாதத்தை உள்வாங்கிக்கொண்டதைப் பார்த்த மக்கள் ஆனந்தமாக நாமாவளி செய்தனர்.

அதைப் பொறுக்காத ஒரு ப்ராஹ்மணர், ”அடேய்! நீர் என்ன அந்தணனா? நீ மாயாவி!” என்று ஏளனம் செய்ய, ***”ஐயா! ஆதியும் அந்தத்தையும் தன்னுள் உணர்ந்த எவரும் அந்தணன் தான்!”*** என்றார்.

*"அப்பபடியானால் இதோ இந்த ஜட மரம் செடிகளும் அந்தணரோ?"* என்று கேலி செய்ய, கணேசர் மிகவும் உயர்ந்த அத்வைத்த பாவத்தில் சகல தாவரங்களையும் தன் ஆத்மாகவே தரிசித்து, ஆனந்தமாக நாம பஜனாவளி செய்ய ஆரம்பித்தவுடன், அனைத்து தாவரங்களும் அதற்கு ஏற்ப அசைந்து கொடுக்கக் கண்ட பழிகாரர்கள் தலை குனிந்து சென்று விட்டனர்.

கணேசர் சிவாஜியின் வேண்டுகோளுக்கு இணங்கி அவ்விடத்தில் ஆஸ்ரமம் கொண்டு ஆன்மீக எழுச்சிக்கு வழிகாட்டினார்.

ஹரி ஓம்!